

மஹாபலிபுரம் க்ஷேத்திர
ஸ்தல புராணம்.



மஹாபலிபுரம். M. S. ரங்காச்சாரியார் அவர்களால்,
1938] வெளியிடப்பட்டது. [விலை அணா 4



ஸ்ரீயை நம:

ஸ்ரீஸ்தலசயந பரப்ரஹ்மணே நம:

மல்லாபுர மென்னும்

மஹாபலிபுர க்ஷேத்திர

ஸ்தலபுராணம்.

(ஸ்ரீ ப்ரஹ்மாண்ட புராணம் க்ஷேத்திர
காண்டத்தில் அகஸ்திய ஸூத ஸம்வாதம்)

திருமலைச்சங்கபுரம்,
ஈ. கை. வரதாச்சாரியார்,
அவர்களால்,
மொழி பெயர்க்கப்பட்டது.

மஹாபலிபுரம்.
S. ரங்காச்சாரியார்,
அவர்களால்.

சென்னை
"பெரியநாயகியம்மன் பிரஸில்,,
பதிப்பிக்கப்பட்டது.
1938

இதன் விலை.] [அணா. 4

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பொதுத் தனியன்,

ஸ்ரீசைலே சதயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்
யதீந்த்ர ப்ரவணம் வந்தேரம்யஜாமா தரம்முநிம். (1)

லக்ஷ்மீ நாதஸமாரம்பாம் நாதயாமுன மத்யமாம்
அஸ்மதா சார்யபர்யந்தாம் வந்தேகுருபாம்பராம். (2)

யோநித்ய மச்யுத பதாம்புஜ யுக்மருக்ம
வ்யாமோஹ தஸ்ததிதராணி த்ருணாயமேனே
அஸ்மக்குரோர் பகவதோஸ்ய தயைகஸிந்தோ
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம்ப்ர பத்யே. (3)

மாதா பிதா யுவதயஸ்த நயா விபூதிஸ்
ஸர்வம் யதேவநியமே நமதந்வயாநாம்
ஆத்யஸ்யந: குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங் க்ரியுகளம் ப்ரணமாமிமூர்த்நா. (4)

பூதம்ஸரஸ்யமஹ தாஹ்வ பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலசேகர யோகிவாஹாந்
பக்தாங் க்ரிரேணுபர காலயதீந்த்ர மிச்ராந்
ஸ்ரீமத் பராங்குசமுநிம் ப்ரணதோஸ் மிநித்யம். (5)

திருக்கடல் மலை

பூதத்தாழ்வார் திருவவதார ஸ்தலம்.

மல்லாபுர்யாம் ஸிஸ்துதிரேவந்தே பூதலஹாயிரம்
புண்டரீசுபிரியம் தேவமயி தயோகிந்திரஸேவிதம்
செறிந்த பணைபறித்துத் திண்களிற்றைச்சாடி
முறிந்துவிழப் பாகனையுமோதி யெறிந்து
திருக்கடன் மல்லைக்குமைத்தான் றஞ்சமென்றுநெஞ்சே
திருக்கடன் மல்லைக்குட்டிரி.

தலசயநத்துறைவார், நிலமங்கை நாய்ச்சியார் ஆனர்த நிலய விமாநம், கருடாநதி, கிழக்கே திருமுகமண்டலம், தலசயனம், புண்டரீக ரிஷிக்குப் ரத்யக்ஷம், திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார்—மங்களாசாசனம்:—

பெரியதிருமொழி-இரண்டாம் பத்து- அஞ்சாந்திருமொழி

பாராய துண்டுமிழ்த்த பவளத்தூணைப்
படுகடலி லமுதத்தைப் பரிவாய்கீண்ட
சீரானை யெம்மானைத் தொண்டர்தங்கள்
சிந்தையுள்ளே முளைத்தெழுந்த தீங்கரும்பினைப்
போரானைக் கொம்பொசித்த போரேற்றினைப்
புணர்மருத மிறநடத்த பொற்குன்றினைக்
காரானை யிடர்கடிந்த கற்பகத்தைக்
கண்டதுநான் கடன்மல்லைத் தலசயத்தே. (1)

பூண்டலத்தம் பிறர்கடைந்து தொண்டுபட்டுப்
பொய்ந்நூலை மெய்ந்நூலென்றென்றுமோதி
மாண்டவத்தம் போகாதே வம்மினெந்தை
யென்வணங்கப் படுவானைக் கணங்களேத்தும்
நீண்டவத்தைக் கருமுகிலை யெம்மான்றன்னை
நின்றவூர் நித்திலத்தைத் தொத்தார்சோலைக்
கண்டவத்தைக் கனலெரிவாய் பெய்வித்தானைக்
கண்டதுநான் கடன்மல்லைத் தலசயனத்தே. (2)

உடம்புருவில் மூன்றொன்றாய் மூர்த்திவேறா
யுலகுய்ய நின்றானை யன்றுபேய்ச்சி
விடம்பருகு வித்தகனைக் கன்றுமேய்த்து
விளையாட வல்லானை வரைமீகானில்
தடம்பருகு கருமுகிலைத் தஞ்சைகோயில்
தவநெறிக்கோர் பெருநெறியை வையங்காக்கும்
கடும்பரிமேல் கற்கியை நான் கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ் கடன்மல்லைத் தலசயனத்தே. (3)

பொய்த்தாயை முலையுண்ட பிள்ளைதன்னைப்
பிணைமருப்பில் கருங்களிற்றைப் பிணைமான் நோக்கி
லாய்த்தாயர் தயிர்வெண்ணெய் அமர்ந்த கோவை
யந்தணர் மமுதத்தைக் குரவைமுன்னே
கோத்தானைக் குடமாடு கூத்தன்றன்னைக்
கோகுலங்கள் தளராமல் குன்றமேந்திக்
காத்தானை யெம்மானைக் கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ் கடன்மல்லைத் தலசயனத்தே. (4)

பாய்ந்தானைத் திரிசகடம் பாறிவீழப்
பாலகனா யாலிலிற் பள்ளியின்ப
மேய்ந்தானை யிலங்கொலிசேர் மணிக்குன்றன்ன
வீரிரண்டு மால்வரைத் தோளம்மான்றன்னை

தோய்ந்தானை நிலமகள் தோள் தூதிற்சென்றப்
பொய்யறைவாய் புகப்பெய்த மல்லர்மங்கக்
காய்ந்தானை யெம்மானைக் கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ் கடன் மல்லைத்தலசயனத்தே. (5)

கிடந்தானைத் தடங்கலுள் பணங்கள் மேவிக்
கிளர்பொறிய மறிதிரிய வதனின்பின்னே
படர்ந்தானைப் படுமதத்த களிற்றின்கொம்பு
பறித்தானைப் பாரிடத்தை யெயிறுசிற
விடந்தானை வளைமருப்பி லேனமாகி
யிருநிலனும் பெருவிசும்பு மெய்தாவண்ணம்
கடந்தானை யெம்மானைக் கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ் கடன்மல்லைத் தலசயனத்தே (6)

பேணாத வலியரக்கர் மெலியவன்று
பெருவரைத் தோளிற நெரித்தன் றவுணர்கோனைப்
பூணாகம் பிளவெடுத்த போர்வல்லோனைப்
பொருகடலுள் துயிலமர்ந்த புள்ளூர்தியை
ஊணாகப் பேய்முலைநஞ் சுண்டான்றன்னை
யுள்ளுவா ருள்ளத்தே யுறைகின்றானைக்
காணாது திரிதருவேன் கண்டுகொண்டேன்
கடிபொழில்கடன்மல்லைத் தலசயனத்தே. (7)

பெண்ணாகி யின்னமுதம் வஞ்சித்தானைப்
பிறையெயிற் றன்றடலரியாய்ப் பெருகினானைத்
தண்ணார்ந்த வார்புனல் சூழ் மெய்யமென்னும்
தடவரைமேல் கிடந்தானைப் பணங்கள்மேவி
எண்ணானை யெண்ணிறந்த புகழினானை
யிலங்கொளிசே ரரவிந்தம் போந்துநீண்ட
கண்ணானைக் கண்ணாரக் கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ் கடன்மல்லைத் தலசயனத்தே. (8)

தொண்டாயார் தாம்பரவு மடியினனைப்
படிகடந்த தாளாளாளற் காளாயுயதல்
விண்டானைத் தென்னிலங்கை யரக்கர்வேந்தை
விலங்குண்ண வலங்கைவாய்ச் சரங்களாண்டு
பண்டாய வேதங்கள் நான்குமைந்து
வேள்விகளும் கேள்வியோ டங்கமாறும்
கண்டானைத் தொண்டனேன் கண்டுகொண்டேன்
கடுபொழில்சூழ் கடன் மல்லைத் தலசயனத்தே. (9)

படநாகத் தணைக் கிடந்தன்ற வுணர்கோனைப்
படவெகுண்டு மருதிடைபோய் பழனவேலித்
தடமார்ந்த கடன்மல்லைத் தலசயனத்துக்
தாமரைக் கண்டுயிலமர்ந்த தலைவர்தம்மை
கடமாரும் கருங்களிறு வல்லான் வெல்போர்க்
கலிகன்றி யொலிசெய்த வின்பப்பாடல்
திடமாக விவையைந்து மைந்தும் வல்லார்
தீவினையை முதலரிய வல்லார்தாமே. (10)

பெரியதிருமொழி-இரண்டாம்பத்து-ஆறுந்திருமொழி.

நண்ணாத வாளவுணரிடைப்புக்கு வானவரைப்
பெண்ணாகி யமுதூட்டும் பெருமானார்-மருவினிய
தண்ணார்ந்த கடன்மல்லைத்தல சயனத்துறைவாரை
யெண்ணாதேயிருப்பாரை யிறைப்பொழுதுமெண்ணோமே,
பார்வண்ண மடமங்கை பனிநன்மாமலர்க்கிழத்தி
நீர்வண்ணன் மார்வத்திலிருக்கையைமுன் நினைந்தவனூர்
கார்வண்ண முதுமுந்நீர்க்கடன் மல்லைத்தலசயனம்
ஆரெண்ணும் நெஞ்சுடையாரவரெம்மை யாள்வாரே, (2)

ஏனத்தினுருவாகி நிலமங்கை யெழில்கொண்டான்
வானத்தி லவர்முறையால் மகிழ்ந்தேத்திவலங்கொள்ள
கானத்தின் கடன்மல்லைத் தலசயனத்ததுறைகின்ற
ஞானத் தொளியுருவை நினைவாரென்நாயகரே (3)

விண்டாரை வென்றுவிவிலங்குண்ண மெல்லியலார்
கொண்டாடும் மல்லகல மழலேற வெஞ்சமத்துக்
கண்டாரைக் கடன்மல்லைத் தலசயனத் துறைவாரைக்
கெண்டாடும் நெஞ்சுடையாரவரெங்கள் குலதெய்வமே. (4)

பிச்சச்சிறு பீலிச்சமண் குண்டர் முதலாயோர்
விச்சைக்கிறை யென்னு மவ்விறையைப் பணியாதே
கச்சிக் கிடந்ததனூர் கடன்மல்லைத் தலசயனம்
நச்சித் தொழுவாரை நச்சென்றன் நன்னெஞ்சே. (5)

புலன்கொள்நிதிக்குவையோடுபுழைக்கைம்மாக நிற்றினமும்
நலங்கொள் நவமணிக்குவையுஞ்சுமந்தெங்கும்நான்றொசிந்து
கலங்க ளியங்கும்மல்லைக் கடன்மல்லைத் தலசயனம்
வலங்கொள் மனத்தாரவரைவலங்கொள்ளென் மடநெஞ்சே.

பஞ்சிச்சிறு கூழை யுருவாகி மருவாத
வஞ்சப்பெண் நஞ்சுண்ட வண்ணல்-முன் நண்ணாத
கஞ்சை கடந்தவனூர் கடன்மல்லைத் தலசயனம்
நெஞ்சில் தொழுவாரைத் தொழுவாயென் தூய்நெஞ்சே. (7)

செழுநீர் மலர்க்கமலம திரையுந்து வன்பகட்டால்
உழுநீர் வயலுழவருழப் பின்முன் பிழைத்தெழுந்த
கழுநீர் கடிகமழும் கடன்மல்லைத் தலசயனம்
தொழுநீர் மனத்தவரைத் தொழுவாயென் தூய்நெஞ்சே. (8)

பிணங்களிடு காடதனுள் நடமாடு பிஞ்ககனோடு
இணங்குதிருச் சக்கரத்தெம் பெருமானார்க் கிடம்—விசும்பில்
கணங்க ளியங்குமல்லைக் கடன்மல்லைத் தலசயனம்

வனங்கு மனத்தாரவரை வணங்கென்றேன் மடநெஞ்சே.
கடிகமழு நெடுமறுகிற் கடன்மல்லைத் தலசயனத்
தடிகளடி யேநினையு மடியவர்கள் தம்மடியான்
வடிகொள்நெடு வேல்வலன் கலிகன்றி யொலிவல்லார்
முடிகொள்நெடு மன்னவர்தம் முதல்வர் முதலாவாரே. 10

பெரியதிருமொழி - மூன்றும்பத்து

அஞ்சாந்திருமோழி-(8) ம்பாட்டு.

சங்குதங்கு தடங்கடல் கடன்மல்லையுட் கிடந்தாயருள்புரிந்
திங்கென்னுள் புகுந்தாயினிப் போயினாலறையோ
கொங்குசெண்பகம் மல்லிகைமலர் புல்கியின்னிள வண்டு
தெங்கிந்தாத விளையும்திரு வாலியம்மானே. [போயிளங்

பூதத்தாழ்வார் இரண்டாந் திருவந்தாதி (70)ம், பாட்டு,

தமருள்ளம் தஞ்சை தலையரங்கம் தண்கால்
தமருள்ளும் தண்பொருப்பு வேலை—தமருள்ளும்
மாமல்லை கோவல் மதிள் குடந்தை யென்பரே
எவல்ல வெந்தைக் கிடம்.



ஸ்ரீயை நம:

ஸ்ரீதலசயனபரப்ரஹ்மணேநம:

மஹாபலிபுர ஸ்தல புராணம்.

அன்விஷ்ய மாணம நயாவ சோவிஷேஸை
ஆராத்ய மானம மரைஸ் தமஸ:பரஸ்தாத்
தத்வஸ்து சர்வசரணம் ஸ்தலதல்பஸாயி
மல்லாபுரே விஜயதெமுளி பாக்யபூம்நா
ஸாயேத்சம் கதும்கமணி ஜீடநிவேச தனயாம்
ஆஸ்ரீஷ்ய காதமவங்ம் கமங்ய ஹாசாம்
நித்யமத துள்ளதபயோ தரசும்ஜஞேத்க
கச்சித் விபாருஹ்ருத்யே கிடீஸ்ராவ வனம்
ஆரான்னிரீக்ஷ்ப சிதசிப்பதிமம் புஜாக்ஷம்
தம்ஸர்வ போக்கியமத ஞேள்ளிஜ ஸாக்திபிரய
ஜானப்ரதீப ஹதசித்த தமோவிஷேஸ
ஸ்தம்பூத யோகின மவாம்கல யேகதாம்ஸம்
ஸ்ரீரங்கல்ல மணமுனிம் சரணம் ப்ரணம்ய
ஸ்ரீசைல சங்கபுராரகனசூரி ஹூறு
மஹபலிாபுரஸ்தல விசேஷ புராண சாரான்
வ்யக்திக ரோதிவர தஸ்ஸாதியாம் ப்ரகஸாதாத்

புராணாரம்பம்.

ஸ்ரீய:பதியாய், அவாப்த ஸமஸ்தகாமனாய் ஸமஸ்தகல்யாணகுண நிதியாயிருக்கிற ஸ்ரீமந்நாராயணனுடைய திவ்ய கல்யாணகுணங்களை அநுபவித்து அவ்விஷயமாகப் புகழ்ந்து சொல்லுகிற அனேகம் பிராமணர்கள் முன் ஒருகாலத்தில்கங்கையினது வடகரையிற் சேர்ந்து ஸம்வாதம் செய்கையில், சிலர் எம்பெருமானுக்கு பரத்துவமேயுளது, ஸௌலப்பியமில்லை என்றும, சிலர் பரத்துவமும் ஸௌலப்யகுணமும்உண்டென்றும் சொல்லி விவாதப்பட்டார்கள். அத்தருணத்தில் தேவரிஷியான நாரதர் கங்கையில் நீராடுவதற்க்காகவந்தார் அவரைஉபயவாதிகளுங்கண்டு. நாரதரே நீர் எல்லாவிஷயங்களிலும் தெளிந்தவராகையால் எங்களுக்கு எம்பெருமானுடைய ஸௌலப்யகுண விஷயமாக உண்டாயிருக்கிற சந்தேகத்தைத் தெளிவிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கையில் அந்நாரதர் ஸ்ரீமந்நாராயணனுக்கு பரத்துவமேஉண்டு, ஸௌலப்பியகுணமில்லைஎன்று உறுதியாகச் சொல்லி, பரத்துவ ஸௌலப்பியங்களிரண்டும் உண்டென்றுவாதிக்கிற பிராமணர்களைத் திரஸ்காரம்செய்துவிட்டு கங்கையில் நீராடப்போகையில்கங்கையானது குளிர்ந்தும், தெளிந்தும், ஆழ்ந்தும், பிரவஹிப்பதை விட்டுமிகவும் உஷ்ணமாகியும், கலங்கியும் கணுக்காலளவு ஆழமுள்ளதாகவும் காணப்பட்டது நாரதர் அதைக் கண்டு இதென்னவிபரீதமென்று நினைத்து ஜலத்திலிறங்கி வருந்திநீராடினார். உடனே அவருடைய ஹிருதயம்கலங்கி விட்டது. அவர்அனேககாலம் அருந்தவங்களை செய்தும். அக்கலக்கம் தெளியவில்லை. அதனால் நாரதர்பரிதபித்து ஸத்தியலோகத்தில் தன்பிதாவாகிய சதுர்முகனை வணங்கி தந்தையே எனது மனக்கலக்கத்தைத் தெளிவிக்கவேண்டுமென்று பிரார்த்திக்க பிரமன் ஜ்ஞான திருஷ்டியினால் இவரது மனக்

கலக்கத்தின் காரணத்தைத் தெரிந்துக்கொண்டு, பிள்ளாய்! எம்பெருமானுடைய ஸௌப்பியகுண விஷயமாக நீ செய் திருக்கிற பாகவதாபசாரமே உனது மனக்கலக்கத்திற்கு காரணமாகிறது. ஸகலலோகங்களுக்கும் அதிபதியாய். ஆதி காரணபூதனுய், எல்லாவற்றிலும் வியாபித்து நிற்பவனுய், எட்டவொண்ணுத நிலமான ஸ்ரீவைகுண்டலோகத்தில் நித் தியருக்கும், முக்தர்களுக்கும் அநுபவிக்கத் தக்கவனுய், முக் தியையளிப்பவனுய் இப்படி எல்லாவற்றிலும் தனக்கு ஸம மானவனும் மேலானவனும் இல்லாதபடி மேன்மையைப் பெற்றிருக்கிற ஸ்ரீமந்நாராயணன் ஸௌலப்பியகுணத்திஞலே திருப்பாற்கடலில் சாய்ந்தருளி, அடியார்களுடைய கூக்குர லுக்கு செவிகொடுத்துக் கொண்டும், பயிரிடுவன் பயிரில்களை எடுப்பது போலே, தன்னை ஆச்ரயித்தவர்களுக்கு விரோதி களான ராவண, சிசுபாயு, கம்ஸ கைடபாதிகளை அழித்து சாதுக்களை ஸம்ரக்ஷணம் செய்வதற்காகவும் தனது ஸ்வபா வத்தை விடாமலே அனேகம் அவதாரங்களைப் பண்ணியும், சேதனர்களுக்கு ஸகலபலன்களையும் தந்தருளுகின்றுன். நாரதரே ஸகலருக்கும்சரணமாகிநிற்கிற ஸ்ரீமந்நாரயணனுக்கு பரத்வமும் ஸௌலப்பியமும் ஸஹஜகுணங்களாகும். இவ்விரு வகை குணங்களில் ஒன்றிராமல் போனுலும் எம்பெருமான் ஸர்வஸம் ரக்ஷகனுகான் இந்த ஸாரத்தை அவனையே ஸகலவி தகெதியாகப் பற்றின மஹான்களே அறிவார்கள் என்றும் இந்தஸௌலப்யகுண விஷயமாக பிரசனைசெய்த பார்வதி தேவிக்கு ஈசுவரன் உபதேசித்ததாய், பின்பு அகஸ்தியருக்கு சூதபௌராணிகர்சொல்லியிருக்கிறதாய், பிரசித்தமாயிருக்கிற ஹரிஸௌலப்ய பிரகாசம்] என்னும் மகாபலிபுர க்ஷேத் திரத்தின் மஹாத்மியத்தைக் கேட்டீராகில் உமது மனந் தெ ளியு மென்றும் சொல்லி இந்த மஹாத்மியத்தைப் பிரமா

ண்டபுராணத்தில் எட்டு அத்தியாயங்களால் பிரமன் நாரதருக்கு பின்வருமாறு உபதேசித்தார்.

ஸ்ரீ புண்டரீகர் என்னும் ரிஷியானவர் சிறந்த பிராமணரால். தபோநிதியாய் எம்பெருமானுடைய திருவடிகளை திவ்வியமான தாமரைமலர்களால் ஆராதிப்பதையே விரதமகக்கொண்டவராய் பூமியிள்ள திவ்விய தேசங்களிற் சென்று அவ்விடத்தில் எழுந்தருளியிருக்கிற எம்பெருமான்களை மஹா பக்தியுடன் ஆராதித்துகொண்டு வருகையில் கிழக்கு ஸமுத்தரத்தின் கரையிலுள்ள திவ்வியதேசங்களில்எம்பெருமானைத் தாமரை முதலிய அனேகவிதங்களான புஷ்பங்களால் ஆராதித்து வராஹ க்ஷேத்திரமான திருவிடந்தைக்கு வந்துஅந்த திவ்வியதேசத்தில் பூவராஹ ரூபியாய் இடது மடியில் பூமிப்பிராட்டியாரோடு எழுந்தருளியிருக்கிற நித்தியகல்யாணப் பெருமானை ஸேவித்து ஆராத்தித்து மஹா ஆநந்தத்துடன் அதற்கு தென்திசையில் மஹாரண்யத்தில் போகையில்இந்த ரிஷியானவர் அற்புதங்களான சுபசகுனங்களைக் கண்டுஇந்த வனத்தில் ஸ்ரீயப்பதியின் கருணையாலிப்பொழுதே சிரேயஸ்ஸைப் பெருவேன் என்றுஇவனது திருவடிகளையே தியானித்துக்கொண்டு வழியிலிருந்த ஒரு உத்தியானவனத்தைக்கண்டு பற்பல விருக்ஷங்களாலும் நன்மணம் வீசுகின்ற நறுமலர் கொடிகளாலும் கதிரொளியும் உட்புகாதபடிதழைந்துயர்ந்து குளிர்ந்த நிழலைத் தருகிற சந்தனதி விருக்ஷங்களாலும்திவ்விய ஸரஸ்ஸுக்களாலும் ரமணீயமாயிருக்கிற அந்தஉத்தியானவனத்தில் விஷ்ணுசர்மாவென்கிற ஒருபிராமணோத்தமன் பன்னிரண்டு திருமண்காப்புகளையும் துளசிமணி நளிநாக்ஷ மாலைகளையும் அணிந்தவராய் எம்பெருமானைத்தியானித்துக் கொண்டு தபோநிதியாய்விளங்க அவரைத்தண்டம் சமர்ப்பித்து அவர்கொடுத்த அர்க்கியம் முதலிய உபசாரங்களைப்

பெற்று, விடைபெற்று, சற்றுதெற்கேசென்று பார்க்கையில் அனேகமாயிரம் பொற்றாமரை மலர்களால்நிறைந்த ஒருபுஷ்கரிணியையும். அந்தக் கமலங்களி னின்றும் காற்றினல்மேலெழுந்து ஆகாயத்தில் சூரியோதயமானாற்போல் பளபளவென்று பிரகாசிக்கிற புஷ்பதூளிகளையுங் கண்டு, அந்தப்புஷ்கரிணியைக்கிட்டி, ஆ! ஆ! இதென்ன ஆச்சரியம், இந்தப்புஷ்கரிணியானது மாநஸமென்று பிரசித்தமான பொய்கையினும் சிறந்திருக்கிறது. இதில் மலர்ந்திருக்கிற புஷ்பங்கள் ஒவ்வொன்றும் ஆயிரமிதழ்க்களை யுடையனவாய், சுவர்ணமயங்களாய்,பரிமளத்தினலே எல்லாருடையமனதையும் வசப்படுத்துவனவாயிருக்கின்றன். இந்தப் புஷ்பங்கள் எல்லாவற்றையும் பறித்து எம்பெருமானுடைய திருவடிகளில் சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆநந்தபரவசராகி எழுந்து குதித்தார்.

அந்தத் தருணத்தில் பக்தபராதீநனான எம்பெருமான் இந்தப்புண்டரீகரிஷியினுடைய ஜன்மசித்தமான பக்திவிசேஷத்தினலே பிரஸந்நனாய் இவரைச் சடக்கென அநுக்கிரஹிக்கத் திருவுள்ளமாய் இவருக்கென்று ஒரு அவதாரம் செய்து இவர் பக்தியுடன்பறிக்கிற இந்தப் புஷ்பங்களைச்சாற்றிக்கொள்ள சங்கற்பித்துக்கொண்டு இவரை வேறு திருப்பதிகளுக்குப் போகாதபடி அப்பொழுது ஒரு அசரீரிவாக்கினலே தடுத்து திருப்பாற்கடலில் வந்து தம்மை இந்தப்புஷ்பங்களாலே ஆராதிக்கக் கடவீர் என்று நியமித்தார் திருப்பாற்கடலுக்கு வருவது இந்த ரிஷிக்கு அசாத்தியமாகையால் தாமே அவரிருக்குமிடத்திற்கு எழுந்தருளிப் பிரத்தியக்ஷமாகத்திருவுள்ள மிருந்தது.

இவ்வித ஆகாசவாக்கைக்கேட்டு இப்படி தேவர்களும் புகழத்தகுந்த பெருமையைப்பெற்ற இந்தப்புஷ்பங்களைபூமியில் நமது பாக்கியத்தினல் பெற்றோமென்று மஹாநந்தபரிதராய்

க்ஷீராப்திநாதனுக்கென்று அந்தப் புஷ்பங்கள் எல்லாவற்றையும் ஒன்று விடாமல் பறித்தார் அத்தருணத்தில் இவருடைய சமீபத்தில் பெரிதாயிருக்கிற ஒரு முதலையானது நாக்கு அறுபட்டு மூர்ச்சித்து மிதந்தது. அதைத் தயையினுல் மனமிரங்கிக் குளிரக்கடாக்ஷித்தார்.பரமபாகவதரான இந்தப் புண்டரீகரிஷியின் கடாக்ஷ மகிமையினாலே அந்த முதலை மூர்ச்சை தெளிந்து முந்தினஜனனத்தை நினைத்துச் சொல், லுகிறது ஓ ரிஷியே! எனதுகுருவே! எனது ஆபத்பந்துவே! உமது கடாக்ஷத்தினுல் எனக்கு சாபவிமோசகாலம் வந்து விட்டது என்றுசொல்ல ரிஷியானவர் ஆச்சரியபபட்டு உனது சரித்திரங்களையும் சாபகாரணத்தையும் சொல்என்று கேட்க, முதலை சொல்லுகிறது.

பிரமரிஷியே! நான் முன் ஜன்மத்தில் மஹாராஜனுயும் மஹாதானங்களைச் செய்துகொண்டும், தருமத்தினுல் பிரஜா பரிபாலனம்செய்துக்கொண்டும், மகாபலிபுரத்தில் வசித்தேன். அந்தப்பட்டணத்தில் எங்கள் குலதெய்வமாகிய பூவராஹப்பெருமாளை என்புத்திரன் இப்பொழுதுகூட ஆராதிக்கிருன்என்றுசொல்லுகையில, புண்டரீகரிஷியானவர் அதின்வார்த்தையைநடுவில் நிறுத்தி அந்த மகாபலிபுரம் எங்கேயிருக்கிறது. அதில் பூவராஹப்பெருமாள் எந்தக்காலத்தில் எந்த பாகவதனுக்கு பிரத்தியக்ஷமானு அதைச்சொல்லென்று கேட்க—

முநீந்திரரே, இந்தப்புஷ்கரிணிக்கு தெற்கில் ஒரு குரோசம்தூரத்திலேஅந்த மகாபலிபுரமிருக்கிறது. அதுமஹாபுண்ணியநகரம், இரண்டு யோஜனை நிகளமும் அரை யோஜனை அகலமும் உடையதாய். சகல செல்வங்களாலும் நிறைந்து இந்திரலோகத்தை ஒத்திருக்கிறது, அதில் சகலசாஸ்திரங்களையுங்கற்றுணர்ந்த பிராமணர்களும் அருந்தவ முனிவர்

களும், சதுரங்கசேனைகளுடன் மஹாசூரர்களாயும், தார்மிகர்களாயும்ஸ்ரீவைஷ்ணவர்களாயமிருக்கிற அரசர்களும். மற்றும் சகல ஜனங்களும் மகிழ்ந்து வஸிக்கின்றனர். கிரயவிக்கிரயங்களுக்காக அந்த நகரத்தில் மற்றொரு தீவிலிருக்கிற விலையுயர்ந்த வஸ்துக்கள் சமுத்திரவழியால் வந்து நிறைந்திருக்கின்றன. அந்தமகாபலிபுரத்தை ஹரிப்பிரியன்என்கிற நான்பரிபாலனம் செய்தேன். இப்பொழுதுமல்லேசுவரன் என்றுபிரசித்தனுய், தார்மிகனுயிருக்கிற சதாநந்த னென்கிற அரசன் ஆளுகிருன், அவன் என்னுடைய புத்திரன், நீதியுடன் பிரஜைகளை ரக்ஷிக்கிருன், சிரத்தையுடன் சாஸ்திர விதிகளைத் தவருமல் பூவராஹப்பெருமாளை மூன்று காலங்களிலும் ஆராதிக்கிருன்.

அவ்விடத்தில் பூவருஹப் பெருமாள் எழுந்தருளின புண்ணிய சரித்திரத்தைச் சொல்லுகிறேன். இதை என் பெரியோர்கள் சொல்லக்கேட்டிருக்கிறேன்.

ஞானப்பிரான் வைபவம்.

புண்டரீக ரிஷியே! என்வம்சத்தில் நெடுநாள்களுக்குமுன் ஹரிசேகரசக்கிரவர்த்தி என்றுபிரசித்தனுன ஒரு அரசனிருந்தான். அவன் தர்மிஷ்டன், ஸத்தியவாதி, விஷ்ணுபக்தன் பராக்ரமத்தில் மாந்தாதர்வினும் சிறந்தவன், அவன் இதற்கு வடக்கில் ஒருயோசனை தூரத்திலிருக்கிற வராஹ க்ஷேத்திரமான திருவிடந்தைக்கு தன்தாயாருடன் தினந்தோறும் சென்று பூவராஹ ரூபியாக எழுந்தருளியிருக்கிற நித்யகல்யாணப் பெருமாளை மத்தியான காலத்தில் சேவித்து ஒரு யோசனை தூரமும் பின்புவந்து தன் கிரஹத்தில் நாலாயிரம்

பிராமணுளை ஆராதித்து அவர்கள் அமுதுசெய்த பின்பு புசிக்கிறது? இவ்விதமாக அநுஷ்டித்து வருகிற வராஹவிரதத்தில் இந்த மஹாராஜனுடைய பக்தியின் ஏற்றத்தையும் பாகவதாராத விசேஷத்தையும் கண்டு பிரசந்நனுன பூவராஹப் பெருமாள் "விரும்பித் தொழுவார்க்கு மெயயனுகையாலே ஒரு நாள் அந்தமல்லாபுரத்திற்கு தாமே எழுந்தருளி வலதுதிருக்கையில் பூமிபிராட்டியாரைச் சிருபெண்ணுகப் பிடித்துக் கொண்டு மற்றொருகையில் தடியூன்றிக்கொண்டு மிகவும் முதியவராய் பிராமணரூபியாய். முதுமையாலே கால்களும் கைகளும் நிலேதவற தழுதழுத்த வார்த்தையுடன் தன் பக்தனுன ஸ்ரீஹரிசேகர மஹாராஜனது கிருகத்திற்கு எழுந்ருளினுர் அந்தமஹாராஜன் பரமபாகவதனுகையாலே பாகவதர்களைக் கண்டால்"தென்றல் நிலவுகளையும் அபிமத விஷயங்களையும் கண்டாற்போல, உகந்து கொள்ளுகிறவரென்று அவருக்கு மஹாநந்தகரமாயிருக்கிற விருத்த ஸ்ரீவைஷ்ணவரூபத்தை திருவுள்ளம் பற்றி எழுந்தருளின அந்தநித்தியகல்லியாணப் பெருமாள் அவர்கிரகத்தின் நடுவில் எழுந்தருளுகையில் அவ்வரசனும் கண்டபோதே எதிர் கொண்டு வந்து தாயாருந்தானுமாக விருத்தரைக் குசலபிரசனம் செய்து ததியாராதனத்தைத் திருவுள்ளம் பற்றி இவ்விடத்தில் எழுந்தருளி யிருக்க வேண்டுமென்று பிரார்த்த்து தான் அநுஷ்டிக்கிற விரதத்தின்படியே திருவிடந்தைக்குப்போக யத்தினப்படுவதைக்கடாக்ஷித்து. பெருமாள்அருளிச்செய்கிருர் மஹாராஜனே நான் அரக்கிழவன்-வழியும் வெகு தூரமாகையால் நடந்துவந்து அதிகமாக சிரமத்தை அடைந்திருக்கிறேன் இந்தசிறுபெண்ணும் அப்படியே பசியினுல் அடிக்கடி மூர்ச்சை அடைகிருள், ஆகையினு லிப்படிவருந்துகிற எங்களுக்கு எவ்வளவு சீக்கிரத்தில் ஆஹாரத்தைக்

காடுத்தீரானல் பிராணன் போகாமலிருக்குமோ அவவளவு காலத்தில் ஆஹாரத்தைக்கொடுமென்று பிராத்திக்கிற விருத்தஸ்ரீவைஷ்ணவரை அரசன் நல்வார்த்தைசொல்லி சுவாமீ! அடியேன்பூவராஹப்பெருமாளை ஆராதித்துவிட்டு இதோவருகிறேன் கருணையுடன் க்ஷமிக்கவேண்டும் என்று விண்ணப்பம்செய்தார். அதைக்கேட்டுபெருமாள் அரசனை நோக்கி மஹாராஜனே! இந்தப்பெண் சிற்றம் சிறியவள் நாம் தள்ளாத கிழவனுயிருக்கிறோம் வழிநடந்து வந்தோம் இனி முகூர்த்தகாலம் சென்றால் எங்களுக்குபிராணஸம்சயம் உண்டாகும் என்று இளைத்து வருந்திச் சொல்லுகிற அந்த விருத்தருடைய வசனத்தைக் கேட்டு அவர்களுடைய சிரமத்தையும்பார்த்து ஹரிசேகரமஹாராஜன் தரும சூக்ஷ்மங்களையும பாகவதாராதனத்தின் பெருமையையும் அறிந்தவராகையால் தங்கள் குலதேவதையான பூவராஹப்பெருமாளாகவே இவரைத்தியானித்து மாநசிகமாக ஆராதனத்தைச் செய்து அந்தக்கிழவரை அக்கன்னிகையுடன் அப்பொழுதே அந்தப்புரத்தில் ரத்தினஸிம்ஹாஸனத்தில் எழுந்தருளச் செய்து அவர்களுக்கெதிரில் ஸ்வர்னபாத்திரத்தில் எல்லா வியஞ்சனங்களுடன் அறுசுவையோடு கூடின திவ்வியமான அன்னத்தை விசேஷமாக சமர்ப்பித்து பக்தியினால் கண்களை மூடிக்கொண்டு அமுதுசெய்தருளவேண்டுமென்று பிரார்த்தித்து பின்புதண்டம் சமர்ப்பித்து எழுந்திருந்து பார்க்கையில்,

---

அந்த விருத்தரை தம் குலதெய்வமான வராஹப்பெருமாளாகவும் அதிசுந்தரியாய்ப் பிரகாசிக்கிற அந்த மங்கைகைப் பெருமாள் வலது மடியில் எடுத்துக் கொண்டிருக்கிற பூமிப்பிராட்டியாராகவும் ஹரிசேகரமஹாராஜன்கண்டு முகமர்லர்ந்

ஆனந்தக் கடலில் மூழ்கி இதென்ன பாக்கியம் பெற்றோம்? மஹாயோகிகளுக்கும் துர்லபனுய்? நித்தியருக்கும் முக்தருக்கும் சுலபனுயிருக்கிற சர்வேசுவரன் அல்பனுயிருக்கிற அடியேனிருக்கு மிடந்தேடி? வாகனம் முதலான பரிகரங்களில்லாமல் எழுந்தருளிவருந்தி அடியேனைக்கொண்டு திருவாராதனத்தை செய்வித்துக்கொள்ளும்படியான ஸௌலப்பிய குணத்தைவெளியிட்டுக்கொண்டு நம்குலதெய்வமான பூவராஹப்பெருமாளைசேவைசாதிக்கப் பெற்றோமென்று அடங்காதசந்தோஷத்தினுலே அடிக்கடி தண்டம்சமர்ப்பித்துத்தன்பந்துக்களுடன் ஸ்துதிசெய்தார், அத்தருணத்தில் ராஜாவினுடைய அரண்மனைக்கு வெளியில் புசிப்பதற்கு வந்திருக்கிற பிராம்மணுளெல்லாரும் பெருமாள் முதுசெய்தருளினகாலத்தில் பூரணமாக புஜித்தவர்கள் போல திருப்தி அடைந்து இதென்ன ஆச்சரியமென்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டு இவ்வாச்சரியத்தை அரசனுடன் சொல்லவேண்டுமென்று அந்தப்புரத்தில்வந்துபார்க்கையி லவ் விடத்தி லனேகமாயிரம்இரத்தினங்களாலிழைக்கப்பட்டதாய். அங்கினியைநிகர்த்ததாயிருக்கிற பழயத்தூண்களாலே பிரகாசிப்பதாய்முத்துக்களால்செய்யப்பட்ட மேற்கட்டியினின்றுதொங்குகிறரத்தினபுஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறரத்தின மண்டபத்தில் உத்தமமான ரத்தின ஹிம்ஹாஸநத்திலிருந்துரத்தினமயமான சுவரில்சாய்ந்து தனதுவலதுமடியில் பூமிப்பிராட்டியைபரித்துக்கொண்டு ஹரிசேகர மஹாராஜனுலேஉபாஸிக்கப்பட்டுவிளங்குகிறபூவராஹப்பெருமானைக்கண்டு அவருடையஸௌலப்பிய குணத்திலீடுபட்டு வேதங்களால் சத்தியுள்ளவரையிலும்ஸ்துதித்தித்து "வாய் அவனையல்லதுவாழ்த்தாதென்றிருக்கிற நாம்," "அவனைப்பல்லாண்டுபாடப் பெற்றோம். இப்படிஇதோர் நன்னாள்வாய்த்ததேயென்று மஹாநந்தத்தை

யடைந்து பெருமாளை உத்தேசித்து லோகநாதனுன வராஹ சுவாமியே! யோகிகள் இடைவிடாமல் அநுபவிக்கவேண்டு மென்று" ஒருநாள் காணவாராயென்றும், காண்பதுஎஞ்ஞான்றுகொலோ,, வென்றும் ஆசைப்படத்தக்க தேவரீரைதிருவாய்ப்பாடியில் கோபாலர்கள் அனுபவித்தார்போலே அநுபவிக்கிற அடியோங்களும் அதிசுந்தரமான இந்ததிவ்வியரூபத்தைக் கண்ணாரக்கண்ட ஹரிசேகரமகாராஜனும் தன்னியகளானேம். இவ்விதமாகவே இந்தக்ஷேத்திரத்தில்எல்லோரும் அனுபவிக்கும்படி எக்காலத்திலும் எழுந்தருளி யிருக்கவேணுமென்று பிரார்த்திக்கையில் பெருமாள்அப்படியேசெய்கிறேமென்றும். இதற்குமேற்கில் ஐந்துயோஜனை தூரத்தில்ஸ்ரீ ஹஸ்திகிரியில் பிரமன்செய்யப்போகிற அசுவமேததில் ஸ்ரீ வைகுண்டத்திலிருந்து நமக்கு புண்ணியக்கோடிவிமாநம்வரப்போகிறதாகையால் அதற்காக மேற்குமுகமாக யெழுந்தருளியிருக்கிறேமென்று அருளிச்செய்தார். அந்தப்பூவராஹப் பெருமாளை ஹரிசேரகமஹாராஜன் நெடுநாள் ஆராதித்தார் அவரதுகுலத்தில் பிரந்தவர்களான என்வரையிலுமிருந்த அரசர்கள் ஆராதித்துவந்தபடியேஇப்பொழுதுஎனதுகுமாரன் ஆராதிக்கிறன். முனிவரே என்பிதாவான ஹரிநந்தனமஹாராஜன் இருபத்தையாயிர வருஷகாலம் ராஜ்ய பரிபாலனம் செய்துமுந்நூறுவயது பிள்ளையாய் யிருந்த எனக்கு ராஜ்யத்தைகொடுத்துவிட்டு அருந்தவம் செய்து ராஜரிஷியாகி தெய்வலோகத்தை அடைந்தார். பின்புநான் அனேக தானங்களையும் வெகுவிதங்களான யக்கியங்களையும் செய்துகொண்டுநீதி தவருதபடி ராஜ்ஜியத்தைப் பரிபாலிக்கையில் ஒரு பிராமணர் பரமபாகவதராய் விளங்கிக்கொண்டு என்னைக்கிட்டி தீனதசையுடன் அரசனேநீவெகுதானம்செய்குருய், ஒருபுருஷனுக்குவேண்டிய அன்னத்தைஆமமாக எனக்கு தினந்தோறும்

கொடுக்க வேண்டுமென்றுயாசித்தார். அப்பொழுதுநாம்வெ குவாக தானம் செய்கிறோமென்றுகெர்வித்துஅந்தப்பாகவத னுககு அலக்ஷியமான உத்தரத்தைச் சொன்னேன். கேட்ட தையும்கொடுக்கவில்லை, அவர்மனங்கலங்கினவராய் நீ முதலை யாகக்கடவைஎன்றுசபித்தார். பின்புநானும்எனக்காக இந்த ப்பட்டணத்திலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களும் சாப விமோசன த்தைப் பிரார்த்திக்கையில் அந்தபாகவதர்சிலகாலம் சென்ற பின்பு இந்தமுதலைக்குபரமபாகவதனுடையகடாக்ஷமும்ஸம் பாஷணமும், நேரிடும், அப்பொழுது இந்தசாபமொழியுமெ ன்று சொன்னார் அப்பொழுதே இந்தமுதலைரூபம் வந்துவிட் டது, இந்தப்பொற்றாமரைக்கயத்தைஅடைந்தேன். இப்படி யாக முப்பத்திராயிரம் வருஷத்தைக்கழித்தேன். வெகுவாக பிராணிகளைப் புசித்தேன். இப்பொழுதுகூட உம்மைக்கண்டு புசிக்கவந்துஉமதுபாதமென்றுநினைத்து உமக்குஅருகிலிருந் த தாமரைதண்டைகடித்தேன் அதனால் எனதுநாக்குஅறுப ட்டுமிதந்துஉமதுகடாக்ஷத்திற்கு பாத்திரமாகிஉமதுகிருபை யினால் இச்சரீரத்தைவிட்டு ஸ்வர்க்கத்தை அடைகிறேனென் றுபிரார்த்தித்து அப்படியே புண்டரீகமுனிவருடையகருணை யால் முதலைரூபமொழிந்து ஹரிப்பிரியமஹாராஜன் திவ்விய ரூபதனைதப்பெற்று சுவர்க்கத்தைஅடைந்தான் பிண்புபுண்ட ரீகரிஷியானவர் பறித்த தாமரை புஷ்பங்களை இடையில்செ ங்கழுநீர் புஷ்பங்களைச்சேர்த்துதேவதேவனுகியபெருமாளுக் கேற்றதான திவ்வியமாலையாகத்தொடுத்துசிரஸில் வஹித்துக் கொண்டு ஆகாசவாக்கின்படிதிரும்பாற்கடலுக்குப்போகநிச் சருத்து கிழக்கில் சற்றுதூரம் சென்று வழியில் தடையாயி ருக்கிற சமுத்திரத்தைக்கண்டுபயந்து என்செய்வோம், திப்ரு பாற்கடலுக்கு எப்படிசெல்வோம் இந்தக்கடல்வற்றினாலல்ல துபோகவொண்ணாதே என்றலைந்துசிரத்தையின்மிகுதியினால்

நிலைதவறினவராய் எழும்புவதும் குதிப்பதும் கூத்தாடுவது மாகஅலையோரத்தில் சஞ்சரித்து பின்பு இந்த அலைகடலைத் தாண்டிப்போவோம் அல்லது ஜலத்தைக் கைகளால்வாரிஇறைந்துவடியவைத்துச் செல்வதேதகுமென்றிஉறுதிபண்ணிக் கொண்டு அருகில் உயர்ந்ததாககரையைக்கட்டிகடலில்மேற்கு முகமாக நின்று கொண்டு நீரை இரைத்தார் இப்படி இறைப்பது மீளப்பாறுவதுமாக ஒருவருஷகாலம்சென்றது அப்பொழுது கரையில் தான் வைத்திருக்கிற புஷ்பமாலையானது வாடிப்போகுமே என்று அதைப்பார்த்துதுக்கித்து பின்புறத்தில் உலகத்தையடங்க விழுங்குவதுபோல் விளங்குகிற கடலைக்கண்டுகலங்கி பின்னு அந்தமாலையைபார்த்துப்பரிதபித்து இந்தப் புஷ்பங்கள் வாடிப் போகிறதற்கு முன்னமே திருப்பாற்கடலில் சென்று பெருமாளுடைய திருவடிகளில்சமர்ப்பித்தாலல்லது நிற்கமுடியாத சிரத்தை வளர்ந்து அதற்கு தடைநேரிட்டபடியால ஸஹிக்கமுடியா தமனோவியாதியையுடையவராய் கைகால்கள் முதலிய இந்திரியங்களின் சக்தியற்றமையால் தன் பிரயத்தினத்தாலேக்ஷீராப்தி நாதனுடைய ஆராதனத்தைச் சாதித்துக்கொள்ள ஒருவித உபாயமுமில்லாதவராய் நிற்கிற புன்டரீகரிஷியானவர் அடியார்களுடைய ஸகலவினைகளையும் ஒழிப்பவரான ஸ்ரீயபதியின் கருணையைத் தானே தனதுஇஷ்டசித்திக்கு உபாயமென்றுஉறுதியாய்நிச்சயித்தார்அதாவதுகருணாநிதியான எம்பெருமானேகெதியற்றுநிற்கிறநமக்கு இஷ்ட சாதனமான உபாயமாய்நின்றுநமது இஷ்டத்தைத் தரவேண்டுமென்றுபிரார்த்தித்தார் ஸகலமான சாராசரங்களையும் தன்வசததில் வைத்துக்கொண்டிருப்பவருமஷகலபிரபஞ்சத்யிலும் உள்ளும் புறமும்வியாபிதுத்நிற்பவருமான அந்த எம்பெருமானுடைய கிருபையைத்தவிரஅவன்திருவடிகளி லிந்தப்புஷ்பங்களைச் சமர்பிக்க உபாயமில்லை

என்கிற மஹாவிசுவாசத்துடன் அவனைச்சரணமாகப்பற்றின வராகையால் பயமற்றுதான் கடலை இறைப்பதையொழித்து நின்றார்.

அந்தஸமயத்தில் க்ஷீராப்திநாதனான பெருமாள் எல்லாச் சேதநருக்கும் தனது ஸௌலப்யகுணத்தை வெளியிடுவதற்கு இதோர் நன்னாள் வாய்த்ததென்று மனமகிழ்ந்து ஸ்ரீகஜேந்திராழ்வானை ரக்ஷிக்கஎழுந்தருளுகையில் பெரிய திருவடிவேகமும்போராதே யிருந்தமையை நினைத்து அவரையும்விட்டுசரணமடைந்து நிற்கிற புண்டரீகரிஷியிருக்கு மிடத்திற்குதிருப்பாற்கடலிலிருந்து தாமே வருத்தரானபிராமணராக எழுந்தருளினர் நம்மைசகலரும் அநுபவிக்கும்படி சுலபனாகஎழுந்தருளுகிறோமாகையால் சங்கசக்கிரங்களைத் தரித்துக்கொண்டிருக்கிறரூபம்நம்மைப்பரமாத்மாவாகக்காட்டும் அதனால் அம்முனிவருக்குஇஷ்டசித்தியுண்டானாலும்நம்மைச்சரணமாகப் பற்றிநிற்கிறரிஷிக்குஎன்னசெய்யப்போகிறோம,சடக்கெனக் கிட்டி அவருக்கு துணையாயிருந்து கடலை இறைப்போமாநல் வார்த்தைகளைச் சொல்லுவோமா. அவரதுசிரமத்தை எப்படி தீர்ப்போம் எப்படிநாம்குறைதீர்ந்தவனாவோம் என்றிருக்கிற நம்முடைய இஷ்டம் சித்திக்காதன்றோ ஆகையால்நமக்குப் பிரியமாய், ரிஷிக்கும் தென்றல்நிலவுகளைப் போலேபோக்கியமாயிருக்கிற வருத்தபிராமணரூபமே இக்காலத்தில் நமக்கு தகுமென்கிறதிருவுள்ளத்தினால் அந்தரூபத்தை அங்கிகரித்து கண்டபோதே தாபங்களைத் தணிப்பதரனநீருண்டமேகம் போன்றதிருமேனியில் அதற்கு அழகைத்தருவதாயிருக்கிற திவ்யபீதாம்பரத்தை தரித்தவராய் ஆசிரிதனையோடிவங்கண்டஆநந்தத்தினாலே மலர்ந்ததாமரைமலர்போல் விசாலதுகளாயிருக்கிற அழகியதிருக்கண்களை யுடையவராய்தனக்கு ரிஷியினிடத்திலிருக்கிற பிரீதி விசேஷத்தைக்காட்டுகிறபுன்

னகையையுடையவராய் புண்டரீக ரிஷியைக் கிட்டிவந்துநிற்கையில் ரிஷியானவர் கொஞ்சம் சிரித்தமுகமாயிருக்கிற அந்த வருத்தரைப்பார்த்து நம்மைப்பரிஹாஸம் செய்யவந்தாரென்று நினைக்கையில், தள்ளாதகிழவர் முழங்காளளவும் நீண்டுருண்டுதொங்குகிறதம் திருக்கையில் தடியை ஊன்றிக்கொண்டு முனிவரைநெருங்கிச்சென்று பிரியவசனங்களாலே முதலில் க்ஷேமத்தை விசாரித்து பின்பு ரிஷியே! நீர் மிகவும்இளைத்து துக்கித்தவரா யிருக்கிறீர் இதென்ன சமுத்திரத்தை இறைத்திருக்கிறது? இந்தத்தாமரை புஷ்பமாலைகளை யார் இங்குவைத்தார்கள்? எதற்காகஇவ்விடத்திற்குகொண்டுவந்தார்கள்இதுகளைச்சொல்லுமென்று கேட்கையில் ரிஷியானவர் பிராம்மணநீர் இவைகளைக்கேட்டு என்ன ஆகப்போகிறது. தடியூன்றிக்கொண்டிருக்கிற கிழவரே! உம்மால் எனது துக்கம்ஒழிக்கமுடியாது நீர்வழியேபோம் என்றுசொல்ல அதைக் கேட்டு புண்டரீகாக்ஷரான கிழவர் ஓய்ரிஷியே நீர்யார்? இந்ததாமரைமாலை என்ன? இந்தஜலமானது ஏது நிமித்தம் இறைக்கப்பட்டிருக்கிறது? இந்தஜலமானது உட்பானைகபாலே பயிர்களுக்குத்தகாதே, சமுத்திரத்தைப் பருவ காலமில்லாத காலங்களில் ஸ்பர்கிக்க அதிகாரமில்லையே, நீர்வேஷத்தினல் பிராமணனாகவிளங்குறீர் அப்படிபட்ட உமக்கு இந்த பிரயத்தினம் எப்படிஉண்டாயிற்று விருதாவாக சிரமத்தை அநுபவிக்கிறீர் உமதுமனதில் என்னநினைத்து இவை எல்லாவற்றையும்செய்தீர்உண்மையைச்சொல்லுமென்று கேட்டார் அப்பொழுது புண்டரீகமுனிவர் நிமிர்ந்து அந்தவருத்தருடைய தேஜஸ்ஸையும் திருமுகமண்டலத்தினழகையும் நன்ருக அடிக்கடிப்பார்த்து அவ்வழகிலீடுபட்டு மனமகிழ்ந்துபிரீதியுடன் பதில் சொல்லுகிறர் ஓபிராமண வருத்தரே! நான் சொல்வதை ஸாவதானமாய்கேளும் நான் வீணாக இறைக்கி

றேனென்று நினைக்கிறீர் ஒருபிரயோஜனமில்லாமல் இதில் நான் யத்தினப்படவில்லை இதில் எனக்கு எல்லாவற்றிற்கும் மேலான பிரயோஜன மிருக்கின்றது. இதைக்கேட்டு எண்ப துவயது சென்ற நீர்என்னசெய்யப்போகிறீர்? ஆனாலும்அன் புடன்கேட்கிற உமக்குபதில்சொல்லுகிறேன் நான்புண்டரீக ன் என்கிறபெயரையுடையவன் எனக்குவிஷ்ணுவின் திருவா ராதனமேமுக்கியகாரியம் புண்ணியகாரமானஇந்ததேசத்திற் குவந்தேன் இவ்விடத்தில் ஸ்வர்ணத்தோ டொத்திருக்கிற் அனேகமாயிரம் தாமரைமலர்களால்நிறைந்த ஒருபுஷ்கரிணி யைக்கண்டேன் இந்தப்புஷ்பங்களினழகையும் பரிமளத்தை யும் பார்த்தனுபவித்து அடங்காத ஆநந்தத்துடன் பெருமா ளுடைய ஆராதனத்திற்காக பறிக்கையில் இவைகளைப்பறித் துதிருப்பாற் கடலிற்சென்று அந்தப்பெருமாள்திருவடிகளில் சமர்பிக்கக்கடவை என்று ஆகாயத்தில் தேவதைகள் சொன் னார் ள் அப்படியே அந்தப் புஷ்பங்களை எடுத்துக்கொண்டு திருப்பாற்கடலுக்கு பிரயாணமாய் வந்து வழியில் தடையா யிருக்கிற இந்தக்கடலை இறைத்தேன் கடலானது வடியாமல் வளருகிறது இறைத்த ஜலம்கடல்போலாயிற்றுஇப்பொழுது ஒருவருஷமிறைத்தும் இருபுறத்திலும் ஜலத்தைக்கண் டேனேயல்லது கடலானது வடியவில்லை பெருமாளுக்கு ஸமர்ப்பிக்காமலே புஷ்பங்களின் அழகும் பரிமளமும்அழிந் துவாடிப்போகுமேஎன்றுபெருஞ்சிந்தையினால் துக்கிக்கிறே னென்று ரிஷிசொல்லக்கேட்டு இன்னமும்இவரைப் பரிசோ திக்க எண்ணங்கொண்டு வருத்தர்கேட்கிறார் ரிஷியே!நீர்பர மபாகவதராயிருக்கிறீர் ஆனாலும் இந்தப் பெருங்கடலானது உமக்குதாண்டமுடியாது அதற்காகபிராணனை ஒழிக்கலாமா கடல் இறைத்துவடியுமா?இதென்னமதிமயக்கம்திருப்பாற்க டலைத்தவிர மற்ற ஸ்தலங்களில் பெருமாளைச் சுலபமாகஆரா

திக்கலாம் என்றுசொன்னவுடனே ரிஷியானவர் துக்கித்தவராய் ஒய்பிராமணரே! கேளும் இந்தப் பொற்றாமறைமலர்களைத் திருப்பாற்கடலில் திருக்கண் வளருகிறபெருமாள்திருவடிகளில் சமர்ப்பிக்காமல் நான்பிழைக்கிறதில்லைஇந்தப்புஷ்பங்கள் வாடாமலிருக்கிறவரைக்குமே என்பிராணன்களுமிருக்கும்இதுவேஎனது நிச்சயம், இந்த நிலைபைத்தவறமாட்டேன். எனக்கு இவ்விஷபததில் ஸகாயம் செய்வது தவிர மற்றொன்றும் சொல்லவேண்டாம் தள்ளாதகிழவனாய் தடியூன்றித்திரிகிற உம்மால்என்ன ஆகப்போகிறது சுகமாய்போம் என்றுசொல்லி, ரிஷிமௌனமாயிருக்கையில் வருத்தரூபியானபெருமாள் இந்தரிஷிதனக்கும் செய்யப்போகிறதிருவாரதனத்தை முக்கியமான நைவேத்திய பரியந்தமாக்கிமுடித்துக்கொள்ளத் திருவுள்ளமாய்ரிஷியைநோக்கிஅருளிச்செய்கிறார் ரிஷியே! உமக்கு மங்களமுண்டாகட்டும் நான்நெடுநாள் சென்ற கிழவன், வழிநடந்து வந்ததினால் சிரமப் பட்டிருக்கிறேன். மிகவும்வேகமாகஎனக்கு அந்தபானாதிகளைக் கொண்டுவாரும் உமக்கும் நான் எனதுசக்தி வஞ்சனையில்லாமல்இதுவிஷயத்தில்இதோஸஹாயம் செய்கிறேன், இந்தக்கிழவனால் என்ன ஆகுமென்று நினைக்கவேண்டாம் என்னைப்பாரும் என்றுசொல்லி கைத்தடியைக்கீழேவைத்து இடுப்பில்உத்தரீயத்தைஇழுத்துக்கட்டி கடலிலிறங்கிக்கைக்கொண்டமட்டும் ஜலத்தைவாரி மெதுவாய் கரையில்இறைக்கையில் ரிஷிபார்த்துக்கொண்டிருக்கையில் தானே அந்தக் கடலானது ஒரு குரோசந்தூரம் வடிந்தது.

புண்டரீகரிஷியானவர் ஆச்சரியமடைந்துபிரஸாததத்தை கொண்டுவரும்படி நியமிக்கவேணுமென்று பிரார்த்தித்தார். பெருமாளும் இவரைஅநுக்கிரஹிக்க வேசமுண்டாய் சீக்கிர

மாய் அன்னத்தைக்கொண்டு வாருமென்று நியமிக்கையில். ரிஷியானவர் முன் முதலைசொல்லிருந்த மகாபலிபுரத்திற்கு ஓடிஒருயஜ்ஞசீலரான மஹாபிராமணருடையகிருகத்தில்சுசி யான அந்நத்தை யாசித்து ஸ்தலமான விபஞ்சநங்களோடும் பூர்ணமாகலபித்து அதைச்சிரஸிலேந்திக்கொண்டு இந்தவரு த்தரை வெகுதூரத்திலிருந்து பார்த்துச்கொண்டே வேகத் துடன் சமீபத்தில் வழிகையில் அந்தவருத்த ஸ்ரீவைஷ்ண வனைத் தாமாராதிக்கவேண்டிய பெருமாளாகவேதாசித்தார்

மனிதர்க்காய் நாட்டில்பிறந்துபடதானபடுங்காலத்திலும் தரையில் சயனிக்காதவராய் நன்மணம் மென்மை குளிர்ச்சி முதலியமகாகுணங்களைப் பெற்றிருக்கிற திருவனந்தாழ்வா னுகிறமெத்தையில் பெரியமேன்மை தோற்ற சயனித்திருந்த பெருமாள் தனது பக்தனை அநுக்கிரகிக்க வேண்டியத்வரை யாலே அவன் தன்னைக்காணக்கருதி வருந்தி நின்றதறையை உகந்து அதில் சுலபனுய்சயனித்து அவன்றனக்காக ஆதரித் துவைத்திருந்தாய் தன்சங்கற்பத்தாலேவாடாமலிருந்த தாம ரஸ் புஷ்பமாலிகையைத்தாமே எடுத்து அதினழகையும் பரிமளத்தையுங்கண்டுகளித்து அதைத்தன்திருமார்பில்வசிக் கிறதன்பிராணநாயகியான பெரியபிராட்டியாருக்குஏற்றதாக நினைத்து அவளுக்கு மாலையிடுகிறவர்போல் திருமார்பில்சாத் திக்கொண்டு அவ்வாநந்தத்தினல்திருமேனிபருத்து அழகுமி குந்திருக்கையாலே கெம்பீரமூர்த்தியாய் வர்ணம் பரிமளம் முதலான குணங்களால் பெரியபிராட்டியாரை நிகர்த்துத் தன்மனதை வசப்படுத்துகிற அந்தமாலையைத்தனக்குச்சாத் துவதற்குமுன் புண்டரீகரிஷி தீனராயிருந்ததுபோ லந்தமா லையைத் தாமோடிவந்து எடுத்து அன்புடன் மாரிலணைத்துச் சாததிக்கொள்ளுகிறவரையில் பெருமாள்மகாதீனதசையை?

பெற்றிருந்தாராகையால் விதைச்சாற்றிக் கொண்டஉடனே கெம்பிரமான யௌவனப்பருவத்தை அடைந்துகண்டபோ தேதாபங்களை தணிப்பதாகியநீருண்ட மேகத்தை நிகர்த்தவ ராய்அப்பொழுதுமலர்ந்து சுந்தரமான தாமரைமலரை யொத்து நீண்டுவிசாலங்களாயிருக்கிற திருக்கண்களையுடையராய் திருமுகமண்டலமாகிற் சந்திர பிம்பத்திற்கு நிலவுபோல்பிர காசிக்கிற புன்கையினல் குளிர்ந்ததான தன் திருவுள்ளத்தை வெளியிடுகிறவராய்சுக நித்திரையைச் செய்யவேண்டிய தருண மெல்லாம்பிராட்டிமார்களையும்திருவனந்தாழ்வானையும்விட்டு த்தமதுபுஜத்தையே தலைக்கணையாக்கிக் கொள்ளுகிறபடியை நினைத்து அந்தப்புஜகுணங்களைத்தாம்அநுபவிக்க ஆசைகொண்டவர்போலும் அஞ்சினவர்களாய்வந்துஅஞ்சலி முத்திரையைக்காட்டுகிறவர்களுக்குதஞ்சமாக அஞ்சேலென்கிறமுத்திரையைக்காட்டித்தனக்குமுன் விரைந்துசென்று ஸாதுக்களை ரக்ஷிப்பதில்தனக்குத்துணையாகுவதைக்கண்டுஉகந்துஅதைத் தாழவிடாமல் உத்தமாங்கத்தில் சேர்த்துக் கொள்ளுகிறவர் போலும்தமது வலதுபுஜத்தைத் தலையின்கீழ்தலைக்கணையாக வைத்துக்கொண்டவராய் இந்தப் திருவடிகளை சரணமடைந்து வாழுங்களென்று சேதனர்களுக்கு காட்டுகிறவர்போல் முழந்தாளளவு நீட்டின திருக்கைகளை உடையவராய் ஸம்ஸாரிகளுடையஸகலதாபங்களையுந்தணிப்பதற்காக கடாக்ஷங்களாகிற அமிருதங்களைப்பொழிகிறவராய் பச்சைமரத்தின் கிளைகள்போல் கறுத்தும் வாழைமரங்கள்போல்நீண்டுருண்டு மழமழப் புடையவைகளா யிருக்கிற திருத்துடைகளால் பிரகாசித்து பீதாம்பரத்தினல் விளங்குகிற திருவடிகளைப் புண்டரீகரிஷி ஆராதிக்கும்படி நீட்டிக்கொண்டு கிழக்கு முகமாய் சயனித்திருக்கிற க்ஷீராப்திநாதனை புண்டரீக ரிஷியானவர் கண்குளிரசேவித்தார்.

இப்படி கோடி சூரியப் பிரகாசத்தையுடையவராய்சேவை சாதிக்கிற க்ஷீராப்திநாதனை புண்டரீக ரிஷியானவர் பிரத்தியக்ஷமாய்சேவித்து பரமயோகிகளுக்குங் கிடைப்பதற்கரிதான இந்தபாக்கியத்தை நாம் பெற்றோமென்றுமனமகிழ்ந்துப் கவானுடையசௌலப்பியகுணத்திலீடுபட்டு அடிக்கடி தண்டம்சமர்ப்பித்து தரித்திரன் நிதியைக்கண்டதுபோல் சந்தோஷித்துதான் சமர்ப்பிக்கும்படி பெருமாள்வைத்திருந்தவிடுதியான தாமரஸ புஷ்பங்களை தன்குறைதீரபெருமாள் திருவடிகளில் தனதுஹிருதய கமலத்தைப்போல்அசையாமல்சமர்ப்பித்து அப்படியே திருமுடியிலும் சமர்ப்பித்து ஆநந்த பாஷ்பங்களை உதிர்த்துக்கொண்டு அஞ்சலி பந்தத்துடன் நின்று ஜயவிஜயீபவ, என்றுதொடங்கி வேதமந்த்ரங்களால் ஸ்தோத்திரஞ்செய்தார், தேவர்கள் புஷ்பங்களைவருஷித்தார்கள்தேவதுந்திபிகளை முழங்கினார்கள் கந்தருவர் கானஞ் செய்தார்கள் அப்ஸரஸ்திரீகள் நாட்டியஞ்செய்தார்கள் அப்பொழுது ரிஷியைப்பார்த்து எம்பெருமான் உமக்கு வேண்டிய வரத்தைக் கேளும் தருகிறோமென்று நியமிக்கையில் ரிஷியானவர் பின்வருமாறுபிரார்த்தித்தார்.

ஸ்லோகம்

அநேநைவமஹாபாஹோ ரூபணேகமலேக்ஷண
அத்ரைவநித்தியஸாந்நித்யம் குருயோகஸ்யாளுநா.

ஓக்ஷீராப்தி நாதனே இந்தப் புவனியில் தேவரீருடைய அர்ச்சாவதாரங்களி லீடுபட்டிருக்கிற என்மனதை மேலான தனது வடிவழகி லீடுபடுத்தி மற்றொரு அர்ச்சாவதாரத்திலும் செல்லவேண்டாதபடி எனதுஅவாவைத்தீர்த்ததான இந்த ரூபத்துடன் இந்த மஹாபலிபுர க்ஷேத்திரத்தில் எனக்கென்று ஆவிர்ப்பவித்தபடியேசகலசேதனங்களுக்கும் எக்காலத்திலும்சேவைசாதிக்கவேணும், பிராமணரூபியாகிஎழுந்த

ருளி கண்ணமுகைக்காட்டி என் மனதை மயக்கி வசப்படுத்திக்கொண்டபுண்டரீகாக்ஷனே கடாக்ஷங்களாகிற அமிருதங்களைவர்ஷித்து ஸம்ஸாரதாபத்தினுல் பரிதபிக்கிற இந்தச்சேதகங்களை உஜ்ஜீவிப்பிக்கவேண்டும். ஒருவகையாலும்வடியாதசமுத்திரத்தைக் கையினுலிறைத்து வடியவைத்துபுஜபலத்தைக்காட்டி,ஒருவருஷகாலமாய்சமுத்திரைத்தைஇறைத்துவாடிநின்ற எனதுவிடாயைத் தணித்தமஹாபுஜனே! இந்தச்சேதநர்களுடையபிறவிக்கடலை வடியவைத்து அவர்களுக்கு அபயத்தைஅளிக்கவேண்டும் ஆச்ருதஸம்ரக்ஷணத்திற்காக பரமபதத்திணின்றும் திருப்பாற்கடலுக்கெழுந்தருளி அவ்விடத்திலிருந்து அந்தரூபத்துடன் எனக்கெதிரில் ஆவிகப்பவித்து என்னை அடிமைகொண்டதுபோல் இந்த ஸம்ஸாரி சேதநர்களை அடிமைகொண்டு அவர்களுக்குஸகல அபீஷ்டங்களையுந் தரவேண்டுமென்று பிரார்த்திக்க நாம் அப்படியேஎக்காலத்திலும்இவ்விடத்தில்வஸிக்கிறோம் ஸ்ரீதேவிமுதலான பிராட்டிமார்களும் அநந்தகருடாதிகளும்நமதுஸந்நிதியில் நித்தியம் வசிக்கக்கடவார்கள், இந்த ரமணீயமான ஸ்தளத்தில்நமக்கு வஸிக்க இஷ்டமுண்டாயிருக்கிறதென்று அருளிச்செய்கிறசமயத்தில் பிரமன் முதலானதேவர்கள், ரிஷிகள், யக்ஷரர்கின்னரர். கின்புருஷர்,கந்தவர் முதலான சகலரும் மஹாஸம்பிரமத்துடன் க்ஷீராப்திநாதன்சர்வ சுலபனுகத்தரையில்சயநித்துக்கொண்டிருக்கிற ஸ்தளத்திற்கு வந்துதண்டம்ஸமர்ப்பித்து. ஸர்வேஸ்வரனுனதேவரீர் பக்தனுக்காக சுலபனுய்சயநித்திருக்கிற பூமியைக்காட்டிலும் ஸத்தியலோகமுதலான லோகங்களில் ஒரு விசேஷ மகிமையில்லை அடியோங்களும்தேவரீருடைய ஸௌலப்பிய குணங்களை அநுபவித்துக் கொண்டு இந்தஸ்தளத்தில் வஸிக்கிறோமென்று விண்ணப்பம்செய்யஎம்பெருமான் புன்னகைசெய்து பிரமனை அழைத்துநீர்உமது

லோகத்தில் வஸித்துக்கொண்டு ஜகத்தைதஸ்ருஷய செய்யும் இது நமதுகட்டளேயென்று நியமிக்கையில் இந்திரன் ஆலோசித்து அப்படி பிரார்த்திக்காமல் பிரதிவருஷம் சைத்திரமாதத்தில் விசாக நக்ஷத்திரத்தில் தேவரீரை அடியேன்வந்துஆராதிக்கும்படி நியமிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தான் அப்படியே வரத்தைக்கொடுத்தார். இவ்வதிசயத்தைக் கேட்டுமகாபலிபுரத்திலிருக்கிறசதாநந்தனென்கிறமஹாராஜனும்பட்டணத்தில் க்ஷீராப்திநாதன் சுவபனுயெழுந்தருளினர் இதென்ன ஆச்சரியமென்று சொல்லி சிரசில், கைகளே குவித்துக்கொண்டு ஒடிவந்து கடற்கரையில்ஒதுங்கின மஹாரத்தினம்போல் தரையில் சயநித்துக்கொண்டிருக்கிற க்ஷீராப்தி நாதனேச்சேவித்து ஆனந்தக்கடலிலமிழந்து பக்தியினுல் பிச்சேறினவர்கள்போல் சிலர் துதித்தார்கள் சிலர்சிரித்தார்தள், சிலர்விரைந்தோடினுர்கள், சிலர்ஆனந்தக்கூத்தாடினுர்கள் சிலர்ஒருவருக்கொருவர் கைகளேப் பிடித்துக்கொண்டு எழும்பிக்குதித்தார்கள் மற்றும் சிலர் கிரஸில் அஞ்சலி பக்தமும்வாக்கில்வேத மந்திரங்களும் மனதில் எம்பெருமானுடையகுணநுபவமும்கண்களில் ஆநந்தபாஷ்பங்களும், கால்களில்ஆனந்தக்கூத்துமாக பகவானைத் துதித்தார்கள் அதனுல்திருவுள்ளமுகந்து எம்பெருமான் புண்டரீக ரிஷிக்கென்று சுலபனுகத்தானவதரித்ததை தன் திருநாமத்தினுல் எல்லோரும் அறியும்படியாக,

தாஸர்களே! புண்டரீகரிஷியை அநுக்ரஹிப்பதற்காகதிருப்பாற்கடலில்நிலசாயியாபிருத்தநாம்ஸ்தலசாயியாக ஆவர்ப்பவித்தோமாவையாலிதுமுதல் நமக்கு ஸ்தலசாயியென்கிறதிருநாமமாகக்கடவுளதுஎன்று அருளிச்செய்யக் கேட்டுபுண்டகரிஷிமுதலான எல்லாரும் ஆச்சரியப்பட்டுஅமிருதம்போன்றஸ்

தலசயனனென்கிற திருமாத்தைச் சொல்லிஸ்துதித்சார்கள் ஸகலலோகங்களுக்கும் நாதனும் சாரணபூதனுமிருக்கிற ஸ்தலசயன சுவாமியே! தேவரீருடைய திருவடிகளில் நிச்சலமான பக்தியுடன் சரணமடைந்திருக்கிற மஹானுபாவர்களேஎங்கள்குலதெய்வம் உம்முடைய பக்தர்களிடத்தில்யார்அபராதஞ்செய்கிறார்களோ அவர்களுக்கு ஒருவிதகெதியுமில்லை எவ்விடத்திலிருந்தாவது ஸ்தலசயனனென்று உமது திருநாமத்தை எவன்சொலலுகிறனோ அவனதுபாதகமலங்கள் தேவதைகளுக்குசிரோபூஷணமாகின்றன. உமக்கு இஷ்டமானவஸ்துவும்பூஜையும்பக்தர்களேயன்றிவேறில்லைஆசனம்சயனம்ஆடையாபரணங்கள் முதலானயாவும் பக்தர்களே ஒருபக்தனுடையநிமித்தமாயன்றோதிவ்வியமான சேஷசயனத்தைவிட்டு இத்தப்பூமியில்சயனித்துக்கொண்டீர், வாக்குக்கும்மனத்திற்கும் எட்டாததான ஸௌலப்பியகுணத்தை ஒருசாஸ்திரங்களையும்கற்றுணராமல் தேவரீருடையதிரு அவதாரத்தினாலே பிரத்தியக்ஷமாய்க்கண்டோம், உமது பக்தர்களிடத்தில் எங்களுக்கு பக்தியுண்டாக வேணுமென்று ஸ்துதித்து ஸ்தலசயசுவாமியின் பாதத்திற்குஅருகில் அஞ்சலிபந்தத்துடன்முகமலர்ந்து நிர்க்கிறபரமயோகியான புண்டரீகரிஷியைசேவித்துபுண்டரீகரிஷியே ஸநகஸநந்தனதிகளையும்அதிசயித்ததியானத்தின்பெருமையைப் பெற்றவராய் ஞானபக்திவைராக்கியங்களுக்குஸ்தானமாய் எம்பெருமானுடைய கடாக்ஷத்திற்குபத்திரபூதராய்மகாரிஷிகளுக்கும் அறிவதற்கு அரிதாயிருக்கிற பரஸ்துவைசுலப மாகஸாக்ஷாத்கரித்த தேவரீரை பூர்வபுண்ணியவசத்தினால்அடியோங்கள் சேவிக்கப்பெற்றோம்தாஸர்களான அடியோங்களை ரக்ஷிக்கவேணுமென்றும்திருப்பாற்கடலைவிட்டுஎம்பெருமானிவ்விடத்திற்குஎழுந்தருளினசரித்திரங்களை அருளிச்செய்யவேண்டுமென்றும்பிரார்த்திக்கையில்புண்

டரீகரிஷிபானவர்பகவானுடையவிசித்ர சரித்திரங்களை நினைத்துஆநந்தபரவசமாய் ஆநந்த பாஷபங்களை உதிர்த்துக்கொண்டுதாமநுபவித்தபடியே பெருமாளுடைய அவதாரத்தைவிஸ்தாரமாக அருளிச்செய்து பொற்றாமரைக்கயத்தில்சாபவசத்தினால்முதலையாயிருந்த ஹரிப்பிரிய மஹாராஜன்சொர்க்கத்தைஅடைந்ததை அவன்புத்திரனாகிய சதாநந்தராஜனுடன் சொல்லுகையில் அவ்வரசன் தன்பிதாவினது சாபநிவர்த்திக்கு காரணமாயிருந்த புண்டரீகரிஷியின் திருவடிகளை பிடித்துக்கொள்ளுகையில் ரிஷியானவர் அரசனே இந்தஸ்தலசயனசுவாமியினுடையஸன்னிதானத்தினால் பெருமைபெற்றிருக்கிற புண்டரீகபுஷ்கரணியில் நீராடி அதின்கரையில் தாநஹோமபித்ருதர்ப்பணஜீவசிராத்த முதலானவைகளைபகவத்பிரீதியாய் செய்யுமென்றும் இந்த மகாபலிபுரக்ஷேத்திரத்தில் கோ, பூமி இரண்யதானங்களைச்செய்தால் அக்ஷயமாய்பலிக்குமென்றும் இவற்றிலும்முக்கியமான தான விசேஷத்தைச் சொல்லுகிறேன் க்ஷீராப்திநாதன் ஒருபக்தனுக்காக தானே எழுந்தருளி பூமியைஉகந்து அதில சயனித்தபடியால் இந்த க்ஷேத்திரத்தில்டரீவைஷ்ணவ பிராமணருக்கு நன்றாய்பலிக்கிறபூமியை தானஞ்செய்தீரானால் உமது பிதிருக்களுக்கு உத்தாரகமாகும் பகவான் பக்தனிடத்தில் தன்ஸௌலப்பியகுணத்தை வெளியிட்டஇடமான இந்தமஹாபலிபுர க்ஷேத்ரத்திற்கு (ஹரிஸௌலப்பிய பியகாசகம்) என்கிற ப்ரசதயுண்டாயிற்று எம்பெருமானுடைய கடாக்ஷத்தைஇச்சிக்கிறவன் இந்த க்ஷேத்திரத்தில் பகவானை பக்தியுடன் ஆராதித்தானாகில் அவன் ஸகல காரிய ஸித்தியையும் பெறுவான் இதைக்காட்டிலும் சூக்ஷ்மத்தைச்சொல்லுகிறேன் இந்த க்ஷேத்திரத்தில் பாகவதர்களை விசேஷமாய்ஆராதித்தானாகில் அவனுக்குபகவான் சீக்கிரத்தில்பிரஸந்நராவாரென்று அருளுச்செய்

தார அப்படியே மல்லேசுவரமஹாராஜன் பரமபாகவதர்க ளான பிராமணோத்தமர்களை ஆராதித்து பூதானம் புஷ்கல மானகிருஹதானம்இவைகளையும்மற்றும் அனேகதானங்களை யும் ஸ்தலசயசுவாமிஸந்நதியில் செய்தபுண்டரீகரிஷியின் நிய மனப்படிக்கு பக்தியுடன் தண்டம் சமர்ப்பித்து அஞ்சலிப ண்ணி வணங்கி நிற்கையில் ஸ்தலசயந ஸ்வாமியானவர் ரா ஜாவைக் குளிரகடாக்ஷித்து நீர்நமது பக்தர்களை நன்றாகஆரா தித்தீர் அதனால் நமக்கு உம்மிடத்தில்ஸந்தோஷமாச்சுது உமக்குமங்களமுண்டாகக்கடவது. வேண்டும்வரனைக்கேளும் என்றுநியமித்தார். அதைக்கேட்டுபக்தியின் மிகுதியால் தழு தழுத்தவார்த்தையுடன் எற்காலத்திலும் தேவரீருடையஇந்த அற்புதமான சேவைஅடியேனுக்கு உண்டாகவேண்டும் எ ன்று பிரார்த்தித்தான் அத்தருணத்தில்பெருமாள் அப்படி யேஇந்த மகாபலிபுரக்ஷேத்திரத்தில் நித்தியவாசத்தைத்திரு வுளம்பற்றி ஸ்ரீவைகுண்டலோகத்திலிருந்து ஆநந்தநிலயமெ ன்கிற நமது விமாநம் இவ்விடத்திற்குவரக்கடவது என்றுஸ ங்கற்பிக்கையில் சூரியோதயமானதுபோல்பிரகாசித்துக்கொ ண்டுஆநந்தரென்கிற நித்திய சூரியனால் அதிஷ்டாநம் செய் யப்பட்டதாயிருக்கிற நவரத்தினங்களிழைக்கப்பெற்றஒருவி மானம் வந்தது, அதைப்பிரதக்ஷிணம் பண்ணிசேவித்து கண்களை மூடிக்கொண்டுஸ்தலசயனப்பெருமானைத்தியானிக் கிற அரசனைப்பார்த்து புண்டரீக ரிஷியானவர் பெருமாள் சன்னதிக்கு திருமதிள்கோபுரம் முதலான கைங்கரியங்க ளைச் செய்யுமென்று நியமித்தார் அப்படியேமல்லேசுவர மஹாராஜன் எம்பெருமானுக்கு திருக்கோயிலையும் அதில் எம்பெருமானுக்கு ஸகலவித உபசாரங்களோடு கூடின திரு வாராதனத்தையும்சைத்திரமாதத்தில் விசாகநக்ஷத்திரத்தில் மஹோத்ஸவா விற்பவித்தையும் ததீயாராதனங்களையும்

விசேஷமாய்செய்வித்தான் ஸ்தலமான சராசரங்களுக்கும் ஆதியான ஸ்ரீமந்நாராயணன் திருப்பாற்கடலைவிட்டு பக்த ஸம் ரக்ஷணத்திற்காக மகாபலிபுரக்ஷேத்திரத்தில்எல்லாருமநுபவிக்கும்படி சுலபனாக எழுந்தருளிஸ்தலத்தில்சயனித்து சேவித்த மாத்திரத்தினாலே முக்தியை யளிப்பவனாகி பிரகாசிக்கையில் தேவர், தேவரிஷிகள்யக்ஷாள், கின்னரர், கிம்புருஷர், மனுஷ்யர், நாகர்முதலான எல்லோரும்வந்து தண்டம்சமர்ப்பித்து சகல பாபங்களையும் ஒழித்து சகல பலன்களையும் பெறுகிறார்கள்.

ஆகையால் ஒ பர்வதராஜபுத்திரியான அம்பிகையே அந்த முக்திக்ஷேத்திரத்தில்வசிக்க எனக்கும் ஆசையுண்டாயிருக்கிறது, சமுத்திரத்தி னலைகள்நின்றும் சிதறிவிழுகிற துளிகளையும் பூமியிலுள்ள தூளிகளையும் எண்ணலாம் ஸ்ரீஸ்தலசயன ஸ்வாமியின் திருக்கல்யாணகுணங்கள் எண்ணிமுடிகிறதில்லை. ஒருவன் அப்படிப்பட்ட எம்பெருமானைப் பக்தியினால் சேவிப்பதற்கு பிரயாணப்பட்டு நடுவழியில் திரும்பினாகிலும் அவன்முடிவில் வசிப்பது ஸ்ரீவைகுண்டலோகத்தில்தான் இந்தவசனங்ளெல்லாம் ஸத்தியமே இந்த ஸ்தலசயனமாஹாத்மியத்தைச் சுருக்கமாக உனக்குச் சொன்னேன்முழுதுமசொல்ல ஒருவனுக்கும் சந்தியில்லை அந்தப்புண்டரீக புஷ்கரணியில் நீராடிமகாபலிபுர க்ஷேத்திரத்தில் ஒரு தினம் அல்லது ஒருநாழிகை ஒருவன் வசித்தானாகில் அவனது குலத்தை அவன் உத்தரிப்பித்தவனாகிறான் என்றி பார்வதிக்கு ஈசுவரனுபதேசித்தாரென்று சூதபௌராணிகர் சொன்னதைக்கேட்டு அகஸ்திய முனிவர்தானுமந்த மஹாபலிபுர க்ஷேத்திரத்தில் வசிக்க ஆசைக்கொண்டு பிரயாணப்பட்டு இமைய மலைக்கு தெற்கில் ஐம்பது யோசனை தூரத்தில்வருகையிற் அவ்விடத்திலிருக்கிறஸம் வர்த்தம் என்கிற

மலையினது சிகரத்தில் களகளவென்று ஒரு கூச்சலைக்கேட்டு அகஸ்தியர் நிதானிக்கையில்எம தூதர்கள்ஆயுதபாணிகளாக பயங்கரமூர்த்திகளாய் வந்து ஒருபிராமணனை அடித்து இடித்துப் பாசங்களால்கட்டி இழுப்பதையும் விஷ்ணுதூதர்கள் வந்து அந்தப்பிராமணனை விடுவித்தையும் அவர்களுக்கு அஞ்சி யமதூதர்கள் ஓடுவதையும், விஷ்ணுதூதர்கள் அவர்களைத்தடுத்து இந்த பிராமணனைநீங்கள் இழுப்பதற்குகாரணமென்னவென்று விசாரிப்பதையும் அதற்கு யமதூதர்கள் கைகளைக் குவித்தவர்களாய்நடுங்கிநின்று விஷ்ணுதூதர்களே இவன் மகாபாதகங்களைச் செய்தவன் பிராமணனாய்ஜனித்து ஸோமயாஜிஎன்கிற பிதாவினால் காலத்தில்உபநயநாதிகளைச் செய்யப்பெற்று வேதங்களை ஓதினான் பிதாமரித்தார் உடனே சூத்திரப்பிள்ளைகளுடன்கூடி ஜந்துக்களைக் கொன்று காட்டில் திரிந்து ஒருவேடுவப்பெண்ணை விவாஹம்செய்துக்கொண்டு அவ்வேடர்களுடன் வேட்டையாடிஅதனால் வயிற்றைவளர்த்து அறுபதுவருஷகாலத்தையும் ஒழித்தான்பிராமணகிருத்தியத்தைப் பறிகொடுத்தான் இவனது பாரியைமரித்தாள் பின்பு பரதாரங்களைப் பீடித்தான்பிரும்மஹத்தியைமுதலான மஹாபாபங்களை எளிதில் செய்தான்இவனது பாபசரித்திரங்களுக்கு பிராயச்சித்தங்களை விதிக்க சாஸ்திரங்களுக்கு சக்தியில்லைஇவன்பாபங்கள்முழுதும்எங்கள் கணக்கு வரவில்லை இப்படிப்பட்டவனை நீங்கள் அங்கீகரிப்பது தகுதியோ என்றுசொன்னதைக் கேட்டுவிஷ்ணுதூதர்கள் சொல்லுகிறார்கள் நீங்கள் சொன்னதெல்லாம் உண்மையேஇவன்மேற்கு ஸமுத்திரத்தின் கரையில் தீர்த்தராஜபுரத்தில் தருமவர்மாவென்கிற மஹாபிராமணனுடையபாரியையான ஸத்தியவதியை வசப்படுத்திக்கொண்டு அவளுடன்நாடெல்லாந் திரிந்துவருகையில் பூர்வபுண்ணிய பலத்தினால்

மஹாபலிபுற மென்கிற மஹாக்ஷேத்திரத்தை அடைந்து அவ்விடத்தில்வசித்துபின்புவெளிப்பட்டான் அதனால் அவனுடைய ஸகலவிதபாபங்களு மொழிந்தன மஹாதேஜஸைப் பெற்றான் நீங்களினிமேல் இப்படிவிசாரியாமல் செய்வது தகா தென்றுசொல்லி அந்தப்பிராமணனை விமானத்தில்யேற்றிக்கொண்டு போவதைத்தான்பார்த்துஅகஸ்தியர்இதென்ன ஆச்சரியம் மஹா புண்ணியகதையைக்கேட்டோம் என்று அதைவிட்டு ஒருமஹா வனத்தின் நடுவில் சொல்லுகையில் அந்த தில்லைவனத்தில் அருந்தவம்செய்கிற ஆறுபெண்களைக் கண்டுதண்டம் ஸமர்ப்பித்து நீங்கள்யாரென்று வினயத்துடன்கேட்கையில் அப்பெண்கள் அகஸ்தியரை நோக்கி முனிவரேநான் கங்கை ஆறுருபத்துடன் தவன் செயகிறேன் முற்காலத்தில் முனிவர்கள் கூடி புண்ணியதீர்த்தங்களை ஸ்துதிக்கையில் ஸகல தீர்த்தங்களினும் கங்காநதியான நான் உத்தமதீர்த்த மென்றும் எனக்கும் மேலானது மகாபலிபுர க்ஷேத்திரத்திலிருக்கிற புண்டரீக தீர்த்தமென்றும் அந்த தீர்த்தத்திற்கு யானும்மற்றதீர்த்தங்களும் அடிமைக்குரியவைக ளென்றும் சொன்னதைக்கேட்டு நான்மனம்கலங்கி வருகையில் இந்த தில்லைவனத்தில் சுப்பிரமணியரைக்கண்டு இந்தசரித்திரத்தை சொன்னேன் அவர் அதைக்கேட்டு ஒ கங்கையேமுனிவர்கள் சொன்னது சத்தியந்தான் நீ விஷ்ணு பாதத்தில் ஆவிர்ப்பவித்தவளாகையால் எல்லாதீர்த்தங்களிலும் நீமேன்மைபெற்றவள்தான் ஆனாலும் மஹாபலிபுரக்ஷேத்திரத்திலிருக்கிறபுண்டரீக புஷ்கரணியானதுமகிமையினால் எல்லா தீர்த்தங்களுக்கும் உத்தமமானது அதைநான் அறிவேன் முன் தாரகாசுரனைக் கொல்லுகையில் அந்தயுத்தத்தில் ஆயுதபாணியாய் யுத்தம்செய்துக் கொண்டிருந்தஒருபிராமணனை அரியாமல்கொன்று விட்டேன் அந்தபிரமஹத்தி என்

ஊப் பிடிக்கையில் எனது பிதாவான ஈசுவரனுடைய அனு மதியினுல் புண்டரீகபுஷ்கரணியில் நீராடி அந்தத்தோஷா தினின்றும் விடுபட்டேன் என்று சொன்னுர்.

அதைக்கேட்டு பின்னும் நான் பரிக்ஷித்து அந்தத்தீர்த் தத்திற்கு அடுமைசெய்யாதபடிஒரு ஹிதத்தைச்சொல்லுமெ ன்று கேட்டேன் அதில்ஸ்நானம் செய்யென்று நியமித்தார் அதற்கு நான் சம்மதிககவில்லே அதனுல் ஸ்ரீராமதாரக மந்தி ரத்தை ஆறுமுகங்களான் உபதேசிக்க வந்தார் நான் அதற்கி ணங்கஆறு ரூபத்துடன்அந்த மந்திரத்தை உபதேமிக்கப்பெ ற்று அந்தப் புஷ்கரணிக்குஅவ்விதமான பெருமையைத்தந்த ருளின க்ஷீராப்தி நாதனைத்தியானித்துக்கொண்டு தவஞ்செய கிறேனென்றி சொல்ல அனதக்கேட்டு அகஸ்தியருக்கு அட ங்காத ஆனந்தமும் ஆச்சரியமும் ஸ்ரீஸ்தலசயநஸ்வாமியின்தி ருவடிகளில் பக்கிதியுமுண்டாகிஅந்தத்தில்லேவனத்திலிருந்து பத்துயோசனே தூரம்வழிநடந்துபோய்மஹாபலிபுரத்திற்குச் சென்றுஅந்தமஹாநகரத்தின்செல்வங்களேயும்மற்றும்அழகு களேயும் பார்த்துக்கொண்டே புண்டரீகபுஷ்கரணியை அ டைந்தா அதின் வடகரையில் அசுவத்தா சிரமத்தில் அருந் தவம் செய்கிற முனிவர்களேத் தண்டம் ஸமர்ப்பித்து விடை பெற்று புஷ்கரணியில் நீராடிபரிசுத்தரராய் திருமண் காப்புக ளேத்தரித்து திருமணித் தாவடங்களே அணிந்துமனதில் ஸ்ரீ ஸ்தலசயன ஸ்வாமி குணங்களே அநுபவித்து வாயினுல் திரு மந்திரத்தை ஜபித்து தலேயில்கைகளேக்கூப்பினவராய் திவ்வி யாலயத்தைஅடைந்து கோபுரத்வாரத்தில் தண்டம்சமர்ப் பித்து துவாரபாலகர்களேச் சேவித்து உள்ளே புகுந்து பலி பீடத்தையும் சுவர்ண மயமான துவஜஸ்த்தம்பத்தையும்சேவி

த்து திவ்யவிமானத்தைத் தண்டம்சமர்ப்பித்து பிரதட்சணம் செய்துவிமாநத்தின் துவாரத்தை யடைந்து அங்கிசேவித் துபக்தியே ஒரு வடிருகொண்டாற்போலாயி மஹாநந்தத்தி லமிழ்ந்துஉள்ளே புகுந்து புண்டரீக வரதனுன ஸ்ரீஸ்தலசய நஸ்வாமியைக் கன்குளிர சேவித்துஅந்தவடிவழகி வீடுபட்டு வேதவாக்கியங்களால் ஸ்துதிசெய்தரர் பக்த பராதீக னுகிய ஸ்தலசயனப் பெருமாள் அகஸ்தியரைக். குளிர கடாக்ஷித்து அவாபிரார்த்தித்தபடியே தம்க்ஷேத்திரத்தில் அவரை நித்தி யமும் வசித்துக்கொண்டு வைகாநஸவிதியை அநுசரித்துதம் மைநித்தியமும் ஆராதிக்கிம்படியாகவும் நியமித்து பின்னும் அருளிச் செய்கிருர் அகஸ்தியரே! கேளும் ஆதியில் நம்மை இந்தப்புண்டரீக ரிஷியானவர் ஆயிரம் வருஷகாலம் ஆராதி த்தார்பின்பு சதாநந்தமஹாராஜனுடைய புத்திரனுகிய தரு மகோப்தாவென்னும் அரசன் ஆயிரம் வருஷகாலம் ஆராதித் தான் அந்தப் புண்டரீக முனியும் இந்த அரசனும் நமதுபத த்தை அடைந்தார்கள் பின்பு நமக்கு தோழனுகியும் வாஹந மாகியுமிருக்கிறகருடன்என்னுடையஅநுக்கிரஹத்தைக்கோ றி நெடுங்காலம் ஆராதித்து பலனைபெற்ருர் அதாவதுமுன் ஒருகாலத்தில் கருடனை நம்ஸந்நிதிக்குவரும்ப, நியமித்தோ ம அவர் அதிகவேகமாக ஓடிவருகையில் அவருடைய இறகு ளால் அருப்பட்டு வழியில் நமது பக்தனுன ஒருவன் கண் கலங்கி நிற்பதை நாம் பார்த்து கருடனுக்கு இறகு விழுந்து போகும்படியாக ஸங்கல்ப்பித்தோம் பின்பு இந்த க்ஷேத்திர ததிவ்நெடுநாள் நம்மை ஆராதித்து அவருக்கு இறகுகள்உண் டாயின—இந்தகருடனுக்குப் பின்புகர்த்தர் என்கிற ஒருமு

னிவர் சறகுகளைப் புசிக்கிறவராய் நமக்கு மாஙவிகமக ஆரா தனம் செய்தார் இனிமேல் நம்மையே கெதியாகப்பற்றின அனேகம் தேவர்களும் யோகிஜர்களும் அயோகிஜர்களுமான நமதுபக்தர்களும் நம்மை ஆராதிப்பார்கள் நாம்புண்டரீகரிஷியின்பிராத்தனைக்கு பராதீநனுகிய இந்த க்ஷேத்திரத்தில் சர்வசுலபனுக வசிக்கிறேமென்று பிரதிஜ்ஞை செய்திருக்கிறேமாகையால்நித்தியவாசம் பண்ணுகிறேம்நீரும்புண்டரீகபுஷ்கரணிக்கு வடகரையில் அசுவத்தாசிரமத்தில் வசித்துக்கொண்டுநம்மையும் நம்மைப்போல்நமது பக்தர்களை ஆராதிக்கக்கடவீர் என்று நியமித்தார் அப்படியே அகஸ்தியர் ஆராதித்துக்கொண்டிருந்தார் அந்த மகாபலிபுரக்ஷேத்திரத்தில்ஸாரமானது பாகவதாராதன மாகையால்அதைப்பெறுகிறவர்கள் ஸ்தலசாயி கடாக்ஷத்திற்கு முக்கியபாத்திர மாகிறார்கள் இப்படி எம்பெருமானுடைய ஸௌலப்பியகுணத்தை அறிந்தவர்களுக்கு ஒருவித பலசித்தியிலும் குறைவில்லை அவர்கள் ஸ்கல சுபங்களையும் பெற்று வாழ்வார் களென்று நாரதருக்கு பிரமதேவன் உபதேசித்தார், உடனே நாரதர் மகாபலிபுர க்ஷேத்திரத்தில் வந்து புண்டரீக புஷ்கரணியில் நீராடிஸௌலப்பியநிதியான ஸ்தலசயனப்பெருமானைச் சேவித்து அவருடைய ஸௌலப்பியத்தி லீடுபட்டு மனந்தெளிந்து மஹாநந்தத்தைப் பெற்றார்.

இந்தப் புண்ணியமான மஹாபலிபுர க்ஷேத்திர மஹாத்யமியமானது கேட்டமாத்திரத்தில் ஸகலபாபங்களையும்

போக்கும் இதை எழுதுகிறவர்களும் உபந்யாசம் செய்கிறவர்களும் ஆதரிக்கிறவர்களும் இந்தப்புஸ்தகத்தை கிருமத்தில் ஸம்ரக்ஷிக்கிறவர்களும் ஸ்ரீஸ்தல சயனஸ்வாமியின் கருணையினால் இந்தலோகத்தில் சகலசெல்வங்களுடன் வாழ்ந்து பரலோகத்தில் பிரமாநந்தத்தைப் பெருவார்கள்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

ஸ்ரீப்ரஹ்மாண்டபுராணம்,

க்ஷேத்திரகாண்டத்தில் அகஸ்தியஸம்தஸம்வாதமான

மஹாபலிபுர ஸ்தலபுராணம்

முற்றிற்று.

ஸ்ரீதலசயநப்ரஹ்மணேநம: